**உதவி அமர்வு நீதிமன்றம், திருவாரூர்.**
**முன்னிலை – திரு. C. ராஜேஷ், B.A., B.L.,**
**உதவி அமர்வு நீதிபதி, திருவாரூர்.**

2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 10ம் நாள் வெள்ளிக்கிழமை
2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், ஆனித் திங்கள் 25ம் நாள்

**அமர்வு வழக்கு எண் 28/2019**

**CNR No.TNTV03–000207–2019**
**குடவாசல் காவல் நிலையக் குற்ற எண் 436/2016**
**(திருவாரூர், நீதித்துறை நடுவர் நீதிமன்ற முதல் நிலைப் பதிவேட்டு வழக்கு எண் 23/2018)**

**வழக்கு சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 01. | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | : | குடவாசல் காவல் நிலைய குற்ற எண் 436/2016 |
| 02 to 07 | எதிரிகளின் விபரங்கள் (பெயர், தந்தை பெயர், தொழில், இருப்பிடம் மற்றும் முகவரி) | : | 1. தமிழ்வாணன், வயது 34/2016<br>த/பெ. கணபதி,<br>ராஜன்தோப்பு, திருக்கண்ணமங்கை.<br>2. தமிழ்குமரன், வயது 29/2016<br>த/பெ. கணபதி,<br>ராஜன்தோப்பு, திருக்கண்ணமங்கை.<br>3. பாஸ்கரன், வயது 46/2016<br>த/பெ. நாகூரான்,<br>ஒட்டநாச்சியார்குடி, கமலாபுரம்<br>4. சுரேஷ், வயது 38/2016<br>த/பெ. நாகூரான்,<br>ஒட்டநாச்சியார்குடி, கமலாபுரம்<br>5. பாலு (எ) பாலச்சந்திரன், வயது 25/2016<br>த/பெ. பாஸ்கரன்,<br>ஒட்டநாச்சியார்குடி, கமலாபுரம்.<br>6. செந்தில் (எ) செந்தில்குமார், வயது 39/2016<br>த/பெ. செல்வராஜ், |

| | | | |
|---|---|---|---|
| | | | கீழத்தெரு, பெருந்தரக்குடி,<br>திருவாரூர்.<br>7. கலையரசி, வயது 28/2016<br>த/பெ. ரஜினி,<br>ராஜன்தோப்பு, திருக்கண்ணமங்கை. |
| 08. | குற்றம் நடைபெற்ற நாள் | : | 29.11.2016 |
| 09. | புகார் கொடுத்த நாள் | : | 29.11.2016 |
| 10. | எதிரிகளை கைது செய்த நாள் | : | 1, 2, 7 ஆகிய எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் 29.11.2016.<br>3, 4, 5, 6 எதிரிகள் 15.01.2017–ம் தேதி மாண்பமை உயர்நீதிமன்றத்தால் முன்பிணையில் விடப்பட்டுள்ளனர். |
| 11. | எதிரியை பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 1வது எதிரி 05.01.2017<br>2வது எதிரி 05.01.2017<br>3வது எதிரி 15.01.2017<br>4வது எதிரி 15.01.2017<br>5வது எதிரி 15.01.2017<br>6வது எதிரி 15.01.2017<br>7வது எதிரி 06.01.2017 |
| 12. | விசாரணை நீதிமன்றம் முதல் ஏற்பு செய்த நாள் | : | 12.03.2019 |
| 13. | சாட்சி விசாரணை தொடங்கிய நாள் | : | 27.01.2020 |
| 14. | சாட்சி விசாரணை முடிவுற்ற நாள் | : | 11.11.2024 |
| 15. | தீர்ப்பு வழங்கிய தேதி | : | 10.07.2026 |
| 16. | தீர்ப்பு நகல் வழங்கிய தேதி | : | 10.07.2026 |
| 17. | காலதாமதத்திற்கான காரணம் | : | அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எதிரிகளின் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆஜரின்மையால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |
| | எதிரிகளின் பெயர் | : | 1. தமிழ்வாணன்<br>2. தமிழ்குமரன்<br>3. பாஸ்கரன்<br>4. சுரேஷ்<br>5. பாலு (எ) பாலச்சந்திரன்<br>6. செந்தில் (எ) செந்தில்குமார்<br>7. கலையரசி |
| | காவல் துறையினரால் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் | : | இதச பிரிவுகள் 147, 148, 341, 294(b), 323, 307, 451, 334, 335, 149, 109 |
| | கூடுதல் குற்றச்சாட்டு | : | இல்லை |
| | எதிரிகளின் பதிலுரை | : | குற்றவாளிகள் இல்லை |
| | நீதிபதியின் தீர்மானம் மற்றும் தீர்ப்புரையின் விபரம் | : | 1) 1 முதல் 6 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 147மற்றும் 307-ன் கீழான குற்றச்சாட்டுக்களும், 1, 2 எதிரிகளுக்கெதிரான இதச பிரிவுகள் 148, 341, 294(b), 324, 451, 335 மற்றும் 307உ/இ 335-ன் கீழான குற்றச்சாட்டுகளும், 3 முதல் 6 எதிரிகளுக்கெதிரான இதச பிரிவுகள் 307உ/இ149-ன் கீழான குற்றச்சாட்டும், 7ம் எதிரிக்கெதிரான இதச பிரிவு 307உ/இ109-ன் கீழான |

| | | | |
|---|---|---|---|
| | | | குற்றச்சாட்டும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, மேற்கண்ட பிரிவுகளின் கீழ் எதிரிகள் விடுதலைபெற உரிமை உடையவர் என குவிமுச பிரிவு 235(1)கீழ் எதிரிகளை மேற்கண்ட பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>2) இவ்வழக்கில் சான்று பொருள்–I ஆக குறியீடு செய்யப்பட்ட சுமார் 40 செ.மீ நீளமுள்ள அருவாள் 1ம் சா.பொ.2 ஆக சுமார் 93 செ.மீ நீளமுள்ள ஆணி பிடுங்கும் கடப்பாறை –1ம் உபயோகமற்றது என்பதால் மேல்முறையீட்டு காலத்திற்குபின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN–51 F 1351 TVS Sports கருப்பு நிற இருசக்கர வாகனத்தை மேல்முறையீட்டு |

| | | |
|---|---|---|
| | | காலத்திற்குபின் உரிமையாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.<br>3) எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த பிணைமுறிப் பத்திரம் ரத்து செய்ய உத்திரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு கடந்த 16.06.2026–ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது, குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு. J.சுதாகரன், அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R.முத்தையன், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலித்தும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

1. இவ்வழக்கில், கண்ட எதிரிகளும் காயம்பட்ட சாட்சிகள் முரளி, முத்துகிருஷ்ணன், குஞ்சுபிள்ளை மற்றும் ஜெயா ஆகியோர்களும் குடவாசல் காவல்நிலைய வரம்புக்குட்பட்ட திருக்கண்ணமங்கை கிராமத்தை சார்ந்தவர்கள். காயம்பட்ட சாட்சிகளின் உறவினரான எதிரி–7 கலையரசிக்கும் எதிரி–1 தமிழ்வாணனுக்கும் கள்ளத்தொடர்பு இருந்துள்ளது. அதனை முரளி கண்டித்துள்ளார். அதனால் ஏற்பட்ட பிரச்சனையில் எதிரிகளின் புகாரின் பேரில் காயம்பட்ட சாட்சிகள் மீது

குடவாசல் காவல் நிலையத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. அதனால் காயம்பட்ட எதிரிகள் சாட்சிகளின் மீது விரோதத்துடன் இருந்து வந்துள்ளனர். அந்த வழக்கு சம்பந்தமாக நன்னிலம் நீதிமன்றத்தில் தினமும் காலையில் நிபந்தனை கையெழுத்து போடுவதற்காக சென்று வந்துள்ளனர். இதை அறிந்த எதிரிகள் மேற்சொன்ன சாட்சிகளை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்துள்ளனர். அதே போல் 29.11.2016–அன்று நன்னிலம் நீதிமன்றத்திற்கு செல்வதற்காக சாட்சி முரளி வண்டி ஓட்ட பின்னால் சாட்சிகள் முத்துகிருஷ்ணன் மற்றும் குஞ்சுபிள்ளை அமர்ந்து TN–60 F–5191 என்ற STAR CITY வண்டியில் சென்று கொண்டிருந்தவர்களை எதிரிகள் கவனித்துள்ளனர். காலை 9.00 மணியளவில் எதிரிகளில் 1 முதல் 6 ஆகியோர்கள் 3 இருசக்கர வாகனத்தில் 2, 2 பேராக சாட்சிகளை விரட்டி கொண்டு வந்துள்ளனர். அதில் TN–51 F–1351 TVS SPORT வண்டியில் எதிரி 1, 2 –ம் வரும் போது எதிரி–2 தன் கையில் இருந்த ஆணிபிடுங்கும் பாறையால் குஞ்சுப்பிள்ளை பின்புறம் அடித்ததாலும் எதிரிகள் அவர்களுடைய வாகனத்துடன் விரட்டியதாலும் வேகமாக முரளி வண்டியை ஓட்டியுள்ளார். அதே நேரத்தில் வடகண்டம் கரைவீரன் காலனித்தெருவில் சாட்சி–1 வண்டியை ஓட்டி வரும் போது எதிரி–1 தன் வண்டியுடன் வழி மறித்துள்ளார். அதனால் நிலை தடுமாறி சாட்சி–1 தன் வண்டியை பாதையில் நின்று கொண்டிருந்த மாரியம்மாள் மற்றும் பசுபதி ஆகியோர்களின் மீது வண்டி மோதியதால் அவர்களும் கீழே விழுந்து மற்றும் மோதிய மாரியம்மாளுக்கு இடது முழங்கை, இடது முதுகு ஆகிய இடங்களில் சிறுகாயங்கள் ஏற்பட்டும், பசுபதிக்கு வலது கால், பாதம், உதடு, இடது கண் ஆகிய

இடங்களில் காயங்கள் ஏற்பட்டு அதில் வலது கால் பாதத்தில் எலும்பு முறிவும் ஏற்பட்டுள்ளது. வண்டியில் வந்த முரளிக்கு இடது முழங்கை மற்றும் இடது நெற்றி ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டன. அதே இடத்தில் மார்ஜினில் கண்ட எதிரிகள் அனைவரும் சட்ட விரோதமாக சாட்சிகள் முரளி, முத்துகிருஷ்ணன், குஞ்சுபிள்ளை ஆகியோர்களை கொலை செய்ய வேண்டும் என பொது கருத்துடனும், எண்ணத்துடனும் எதிரி–1 அருவாள் எதிரி–2 ஆணி பிடுங்கும் கடப்பாறையுடன் ஒன்று கூடியுள்ளனர். அதே நேரத்தில் எதிரிகள் 1–2 சாட்சிகளை பார்த்து குச்சிக்காரி தேவடியா மவனுவோலா எங்களையாடா வெட்டுனீங்க உங்களை வெட்டி கொல்லாமல் விடமாட்டோம் என அசிங்கமாக திட்டியும், மிரட்டியும் பின்பு எதிரி–1 தன் கையில் இருந்த அருவாளால் இத்தோடு செத்து தொலைடா என்று முரளியின் தலையில் வெட்ட சென்ற போது அவர் விலகி கொண்டதால் அந்த வெட்டு முத்துகிருஷ்ணனின் தலையில் பட்டு ரத்தகாயம் ஏற்பட்டது. அதே நேரத்தில் எதிரி–2 தன் கையில் இருந்த ஆணிபிடுங்கும் பாறையால் கொலை செய்யும் எண்ணத்துடன் முத்துகிருஷ்ணனின் தலை, வலது கை, வலது விலா ஆகிய இடங்களில் அடித்து கொடுங்காயங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். அதே நேரத்தில் அதே சம்பவத்தில் தடுக்க சென்ற சாட்சி குஞ்சுபிள்ளையை எதிரி–2 தன் கையில் இருந்த ஆயுதத்தால் அதே எண்ணத்துடன் அவரை தாக்கிய போது அதை அவர் கையால் தடுத்ததால் அவருக்கு 2 கைகளிலும் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் உடனிருந்த மற்ற எதிரிகள் 3 முதல் 6 கைகளால் கொலை செய்யும் எண்ணத்துடனும் பொது கருத்துடனும் காயம்பட்ட மூவரையும் மாறி மாறி

தாக்கியுள்ளார். பின்பு சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரிகள் 1–2 ஆகியோர்கள் சாட்சி ஜெயா என்பவரை தாக்கி கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் வீட்டிற்கு 29.11.2016–அன்று காலை 10.00 மணிக்கு சென்றுள்ளார். அப்போது எதிரி –7 அங்கு வந்த எதிரிகள் 1, 2டம் சாட்சி ஜெயாவை வெட்டி கொல்லுங்கடா, இந்த தேவடியா தான் எல்லாத்துக்கும் காரணம் என தூண்டியும் உடனே எதிரிகள் 1, 2 ஜெயாவின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தும் எதிரி–1 அருவாளால் கொலை செய்யும் எண்ணத்துடன் ஜெயாவின் தலை, வலது கை, இடது தோள்பட்டை இடது பக்க பின்புறம் ஆகிய இடங்களில் வெட்டி பலத்த காயங்களையும் எதிரி–2 ஆணிபிடுங்கும் இரும்பு பாறையால் ஜெயாவை தாக்கி காயப்படுத்தியுள்ளனர். மேற்படி காயம்பட்ட சாட்சிகளுக்கு உடனடியாக தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டதால் பிழைத்துள்ளனர். எனவே எதிரிகள் மீது எனவே, எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 341, 294(b), 323, 307, 451, 334, 335, 149, 109–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குடவாசல், காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை பெற்றுக்கொண்ட திருவாரூர், நீதித்துறை நடுவர் அவர்கள் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 341, 294(b), 323, 307, 451, 334, 335, 149, 109–ன் கீழ் தண்டிக்கத்தக்கது என முடிவு செய்து, முதல் நிலைப்பதிவேட்டு வழக்கு எண் 436/2016 – என கோப்பிற்கு எடுத்து, அதன் நகல்களை எதிரிகளுக்கு குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக

வழங்கியுள்ளார். பின்னர் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 341, 294(b), 323, 307, 451, 334, 335, 149, 109–ன் கீழான குற்றச்சாட்டுகள் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என கருதி இந்த வழக்கை குவிமுச பிரிவு 209(அ)ன் பிரிவின் கீழ் திருவாரூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிட்டுள்ளார். மேற்படி வழக்கைப் பெற்றுக்கொண்ட திருவாரூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி அவர்களால் இவ்வழக்கினை அமர்வு வழக்கு எண் 28/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்னர் விசாரணைக்காக திருவாரூர், கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 341, 294(b), 323, 307, 451, 334, 335, 149, 109–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கி கேள்விகள் கேட்கப்பட்ட போது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்துரைத்துள்ளார். எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்த காரணத்தால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.16 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.30 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:—</u>**

5. இவ்வழக்கில் அ.சா.5, அ.சா.7,8, 9 மற்றும் அ.சா.10 ஆகிய சாட்சிகள் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளனர்.

6. அ.சா.1 திரு. முரளி – தனது சாட்சியத்தில், தான் தற்போது திருக்கண்ணமங்கையில் வசித்து வருகிறேன் என்றும் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தான் ஸ்டார் சிட்டி வாகனத்தில் நன்னிலம் கோர்ட்டிற்கு சென்று கொண்டிருந்த போது எதிரிகள் அனைவரும் கட்டை மற்றும் அரிவாளால் தன்னை அடித்தார்கள் என்றும் தன் அண்ணியின் மீது தவறாக சொன்னதை நான் கேட்டேன் என்றும் அதற்காக எதிரிகள் என்னை அடித்தார்கள் என்றும் அதில் தனக்கு இடது முழங்கையில் அடிப்பட்டது என்றும் தன் அப்பாவையும் அண்ணனையும் வண்டியில் அழைத்து சென்ற போது அவர்களையும் எதிரிகள் அடித்தார்கள் என்றும் தன் அண்ணி ஜெயாவை வீட்டில் வந்து எதிரிகள் அடித்தார்கள் என்றும் தனக்கு அடிப்பட்டவுடன் நான் ஓடிவிட்டேன் என்றும் திரும்ப வந்து பார்த்த போது அண்ணனும், அப்பாவும் அடிப்பட்டு கீழே கிடந்தார்கள் என்றும் பிறகு திருவாரூர் மெடிக்கல் காலேஜ் மருத்துவமனையில் கொண்டு வந்து பார்த்தபோது அண்ணனும், அப்பாவும் அடிப்பட்டு கிழே கிடந்தார்கள் என்றும் பிற்கு திருவாரூர் மெடிக்கல் காலேஜ் மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தேன் என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் தன்னால் கொடுக்கப்பட்டது தான் என்றும் அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் தன்னை விசாரித்தார்கள்

என்றும் TN51 F1351 பதிவெண் கொண்ட TVS Sports கருப்பு நிற இருசக்கர வாகனம் சா.பொ.1 ஆகும் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்.

7. அ.சா.2 திரு. முத்துகிருஷ்ணன்– தனது சாட்சியத்தில், தான் தற்போது திருக்கண்ணமங்கை தோப்புதெருவில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன் என்றும் அ.சா.1 தனது தம்பி என்றும் தற்போது திருக்கண்ணமங்கை தோப்புத்தெருவில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும் காயம்பட்ட ஜெயா தனது மனைவி ஆவார் என்றும் மற்றொரு காயம்பட்ட சாட்சியான குஞ்சுப்பிள்ளை தனது அப்பா என்றும் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் 1,2 எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்ற எதிரிகள் வெளியூரை சேர்ந்தவர்கள் என்றும் முதல் எதிரி தமிழ்வாணன் என்பவர் 7வது எதிரி கலையரசி என்பவரும் தவறான உறவில் இருந்தார் என்றும் சம்பவத்திற்கு 1 மசாதம் முன்பு தங்களுக்கும் முதல் எதிரிக்கும் தகராறு நடந்தது என்றும் அதில் தமிழ்வாணன் கொடுத்த புகாரின் பெயரில் குடவாசல் காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த வழக்கில் நிபந்தனை கையெழுத்து போடுவதற்காக தான், அ.சா.1. முரளி மற்றும் தன் அப்பா குஞ்சுப்பிள்ளளை ஆகியோர் நன்னிலம் நீதிமன்றத்திற்கு ஸ்டார் சிட்டி என்ற இருச்சக்கர வசாகனத்தில் சம்பவத்தன்று அதாவது 29.11.2016 அன்ற காலை 8 முதல் 9 மணியளவில் சென்றுக் கொண்டிருந்தோம் என்றும் திருக்கண்ணமங்கையிலிருந்து நன்னிலம் போவதற்காக மணக்கால் அய்யம்பேட்டை வழியாக செல்லும் போது வடகண்டம் கரைவீரன் வளைவு காலனி தெரு அருகே சென்று கொண்டிருந்த போது தமிழ்குமரன் மற்றும்

தமிழ்வாணன் ஆகியோர் வழி மறித்து ஸ்டார் ஸ்போட்ஸ் என்ற இருச்சக்கர வசாகனத்தில் தங்களை விரட்டி வந்தார்கள். தங்களை வழிமறித்து முதலில் அருவாள் மற்றம் கம்பி பாரையால் மேற்படி இரண்டு எதிரிகளும் தனது தம்பியை அடித்தார்கள் என்றும் தான் தடுக்க சென்ற போது தமிழ்வாணன் என்பவர் கம்பி பாரையால் தனது தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றும் நாங்கள் தடுமாறி கீழே விழுந்தவுடன் தமிழ்குமரன் என்ற எதிரி அருவாளால் தலை, கை மற்றும் கால்களில் தன்னை வெட்டி விட்டார் என்றும் பின்னால் இருச்சக்கர வாகனத்தில் வந்த பாஸ்கரன், சுரேஷ், பாலு, இந்நீதிமன்றத்தில் வலமிருந்து இடமாக6 வதாக நிற்கும் நீலக்கலர் சட்டை போட்ட எதிரி ஆகியோர் தங்களை மறித்து தங்களையும் தன் அப்பாவையும் தாக்கினார்கள் என்றும் கம்பு, கை மற்றும் அருவாள் ஆகியவற்றால் தங்களை தாக்கினார்கள் என்றும் தான் எதிரிகள் தாக்கியதில் மயங்கி விழுந்துவிட்டேன் என்றும் அங்கிருந்தவர்கள் தன்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும் அதன் தொடர்ச்சியசாக எதிரிகள் தங்கள் வீட்டிற்கு சென்று தன் மனைவி ஜெயாவை அருவாளால் தாக்கி காயத்தை ஏற்படுத்தியதால் தன் மனைவியை திருவாரூர் அரசு மருத்துவமனை கல்லூரியில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும் தன்னிடம் காட்டப்படும் அருவாளால் தான் முதல் எதிரி வழக்கு சம்பவத்தின் போது தன்னை வெட்ட பயன்படுத்தியதாகும் என்றும் அந்த ஆணி பொருந்திய கம்பி தமிழ்வாணன் பயன்படுத்தியதாகும் என்றும் வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.ஆ.3 திரு.குஞ்சுபிள்ளை – தனது சாட்சியத்தில், தான் தற்போது திருக்கண்ணமங்கை தோப்புதெருவில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும் அ.சா.1 மற்றும் அ.சா.2 தனது மகன்கள் ஆவார்கள் என்றும் ஜெயா தனது மருமகள் ஆவார் என்றும் மற்ற காயம்பட்ட மாரியம்மாள் மற்றும் பசுபதி ஆகியோர் கரைவீரன் காலணியை சேர்ந்தவர்கள் ஆவார்கள் என்றும் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் முதல் சம்பவம் மறைந்த முன்னாள் முதலவர் ஜெயலலிதா அவர்கள் இறந்த அன்று நடந்ததாகும் என்றும் தங்கள் மீது குடவசாசல் காவல்துறையினர் பதிவு செய்திருந்த குற்ற வழக்கில் நிபந்தனை கையெழுத்து போடுவதற்காக தானும் தனது இரண்டு மகன்களும் பெரிய பைக்கில் திருக்கண்ணமங்கையிலிருந்து நன்னிலம் நீதிமன்றத்திற்கு கையெழுத்து போடுவதற்காக சென்று கொண்டிருந்தோம் என்றும் சுமார் 6 ,7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 8முதல் 8.45மணியளவில் சென்றுக் கொண்டிருந்தோம் என்றும் கும்பகோணம் ரோட்டில் கரைவீரன் காலணி என்ற இடத்தில் தாங்கள் சென்று கொண்டிருந்த போது தமிழ்குமரன் என்பவரும் தமிழ்வாணன் என்பவரும் தங்களை வழிமறித்து கம்பி மற்றும் அருவாளால் தமிழ்குமரன் கம்பியால் தனது மகன் முத்துகிருஷ்ணனின் தலையில் ஓங்கி அடித்தார் தாங்கள் தடுமாறி கீழே விழுந்தவுடன் மற்ற எதிரிகளும் அங்கு வந்து கம்பியால் தன்னை தாக்கினார்கள் என்றும் தான் மறித்தபோது தனது இடது கை விரல்களில காயம் ஏற்பட்டது என்றும் மீண்டும் அடித்த போது தான் அதை வலது கையால் தடுத்த போது மணிக்கட்டிற்கு கீழ் எலும்பு உடைந்து வளைந்து விட்டது என்றும் சாட்சியானவர் தனது வளைந்த வலது கையை காட்டி

சாட்சியமளிக்கிறார் என்றும்  உடனே தான் மயக்கமாகி விட்டேன் என்றும் 3 நாள் கழித்து நிணைவு திரும்பியவுடன் தனது மருமகளையும் எதிரிகள் தாக்கியதாக கேள்விபட்டேன் என்றும் வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.ஆ.4 திருமதி.ஜெயா – தனது சாட்சியத்தில், தான் தற்போது திருக்கண்ணமங்கை தோப்புதெருவில் வசித்து விவசாய கூலி வேலைசெய்து வருகிறேன் என்றும்  காயம்பட்ட முரளி, முத்துகிருஷ்ணன, குஞ்சுப்பிள்ளை ஆகியோரை தனக்கு தெரியும் என்றும் இவ்வழக்கின் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் எதிரிகள் அனைவரும் தங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும் கடந்த 2017 ஆம் ஆண்டில் ஒரு நாள் காலை 10 மணியளவில் அ.சா.1 முதல் 3 வலரயிலானவர்கள் நீதிமன்றத்திற்கு கையெழுத்து போடுவதற்காக சென்ற போது எதிரிகள் அனைவரும் வழி மறித்து அடித்தார்கள் என்றும் கேள்விபட்டேன் என்றும் அதனை தொடர்ந்து தன் வீட்டிற்கு வந்து எதிரிகள் அனைவரும் கம்பி ,அருவாள் போன்ற ஆயுதங்களுடன் வந்து தன்னை மண்டை மற்றும் முதுகில் அடித்தார்கள் என்றும் தன்னுடைய முதுகில் அருவாளால் வெட்டியதில் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும் கூட்டத்தில் யார் வெட்டியது என்று ஞாபகமில்லை என்றும் காயம்பட்டிருந்த தன்னை அருகிலிருந்தவர்கள் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு வந்து சேர்த்தார்கள் என்றும் போலீசார் விசாரிக்க நடந்த விவரத்தை சொன்னேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.ஆ.11 திரு.நடராஜசேதுபதி – தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இளநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் கடந்த 29.11.2016 ஆம் தேதி தான் மேற்படி மருத்துவமனையில் பணியிலிருந்த போது முரளி, த/பெ. குஞ்சுப்பிள்ளை, ஆண் வயது 31 என்பவர் சிகிச்சைக்கு ஆஜரானார் என்றும் அவர் அப்போது சுயநினைவோடு காணப்பட்டார் அவர் தன்னை தெரிந்த 10 நபர்கள் இரும்பு ராடால் வடகண்டம் அருகே அடித்து காயப்படுத்தியதாக கூறினார் என்றும் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது என்றும்

1. இடது காலில் 3 x 2 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம்

2. 1x1 செ.மீ அளவில் வலது கையில் சிராய்ப்பு காயம்.

3. 3x2 செ.மீ அளவில் முன்நெற்றியில் சிராய்ப்பு காயம்.

அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்து அறுவை சிகிச்சை பிரிவிற்கு அனுப்பிவைத்தேன் என்றும் நுண்கதிர் பரிசோதணை எடுத்து பார்க்கப்பட்டது அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்று கருத்து தெரிவித்து காயம் குறித்து கருத்துரை சான்று வழங்கினேன் என்றும் தற்போது காட்டப்படும் விபத்து பதிவேட்டு ஆவணம் மற்றும் கருத்துரை சான்று மேற்படி முரளி சம்பந்தமாக தான் வழங்கியதுதான் என்றும் விபத்து பதிவேட்டு ஆவணம் அ.சா.ஆ.9 என்றும் காயசான்று அ.சா.ஆ.10 என்றும் அதே நாள் ஜெயா, க/பெ.முத்துகிருஷ்ணன், பெண் வயது 25, என்பவரும் சிகிச்சைக்கு ஆஜரானார் என்றும் அவரும் அப்போது சுயநினைவோடு காணப்பட்டார் தன்னிடம் தன்னை தெரிந்த 10 நபர்கள் குடவாசல் திருக்கண்ணமங்கையில் உள்ள வீட்டிடம், காலை 8 மணியளவில்

கதிர்அருவாள் மற்றும் மரக்கம்பால் அடித்து காயப்படுத்தியதாக கூறினார் என்றும் அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது என்றும்

1. 7x5 செ.மீ அளவில் வெட்டுக்காயம் வலது காலில்

2. 5x3x எலும்பின் ஆழம் தெரியும் அளவில் தலையின் மேல்புறத்தில் வெட்டுக்காயம்

3. முதுகின் பின்புறத்தில் 8x1 செ.மீ அளவில் வெட்டுக்காயம்.

4. இடது தோள்பட்டையில் ஓர் வெட்டுக்காயம்.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து நுண்கதிர் படங்கள் எடுத்து பரிசோதனை செய்யப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என கருத்து தெரிவித்து கருத்துரை சான்று வழங்கினேன் என்றும் தற்போது காட்டப்படும் விபத்து பதிவேட்டு ஆவணம் கருத்துரை சான்று மேற்படி ஜெயாவிற்கு தான் வழங்கியதுதான் மேற்படி விபத்து பதிவேட்டு ஆவணம் அ.சா.ஆ.11 என்றும் காயம் குறித்த கருத்துரை சான்று அ.சா.ஆ.12 என்றும் போலீசார் இதுசம்பந்தமாக தன்னை விசாரணை செய்தார்கள்.

11. அ.சா.ஆ.12 திரு.ரஞ்சித் – தனது சாட்சியத்தில், தான் தற்போது செருவாவிடுதி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் கடந்த 29.11.2016 ஆம் தேதி தான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியிலிருந்த போது காலை 10.38 மணியளவில் பசுபதி, த/பெ.பக்கிரிசாமி, திருக்கண்ணமங்கை ஆண் வயது 40 என்பவரை

அவரது மனைவி சிகிச்சைக்கு ஆஜர் செய்தார் என்றும் அவரை தான் பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவோடு காணப்பட்டார் என்றும் அவர் தன்னிடத்தில் நடந்து சென்றபோது கடந்த 29.11.2016 ஆம் தேதி காலை 9.48 மணியளில் திருக்கண்ணமங்கையருகே இரு சக்கர வாகனம் மோதி காயம்பட்டதாக கூறினார் என்றும் அவருக்கு 5x 4 x 2 செ.மீ அளவில் வலது கால் பாதத்தில் வெட்டுக்காயம் ஒன்றும், 2 x2x 1 செ.மீ அளவில் மேல் உதட்டில் கிழிந்த காயம் ஒன்றும், 2 x 2 x 1 செ.மீ அளவில் வலது கண்புருவத்தில் கிழிந்த காயமும் காணப்பட்டது என்றும் அவரை தான் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன் என்றும் அதற்காக தான் வழங்கிய விபத்து பதிவேட்டு ஆவணம் தான் தற்போது காட்டப்படுவது என்றும் அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் அ.சா.ஆ.13 என்றும் அதே நாள் காலை 10.39 மணியளவில் மாரியம்மாள், க/பெ.மாயாண்டி, திருக்கண்ணமங்கை பெண் வயது 35 என்பவரை அவரது கணவர் சிகிச்சைக்காக ஆஜர் செய்தார் என்றும் தான் அவரை பரிசோதனை செய்தேன். அப்போது அவர் சுயநினைவோடு காணப்பட்டார் என்றும் அவரும் தான் நடந்து சென்றபோது திருக்கண்ணமங்கை அருகே கடந்த 29.11.2016 ஆம் தேதி இருச்சக்கர வாகனம் மோதி காயம்பட்டதாக கூறினார் என்றும் அவருக்கு 3x2x1 செ.மீ அளவில் இடது முழங்கையில் வெட்டுக்காயம் ஒன்றும், 4 x 3 செ.மீ அளவில் இடது பக்க முதுகில் சிராய்ப்பு காயமும் காணப்பட்டது என்றும் அவரையும் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன் என்றும் அதற்காக தான் வழங்கிய விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது என்றும் அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் அ.சா.ஆ.14 என்றும் அதே நாள் ஜெயா,

க/பெ.முத்துகிருஷ்ணன், பெண் வயது 25 என்பவரும் சிகிச்சைக்காக ஆஜரானார் என்றும் அவரையும் தான் தான் பரிசோதனை செய்து, திருவாரூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன் என்றும் அதற்காக தான் வழங்கிய விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது என்றும் அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் ஏற்கனவே அ.சா.11 ன் மூலம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதேநாள் காலை 10.42 மணியளவில் முத்துகிருஷ்ணன், த/பெ.குஞ்சுப்பிள்ளை, ஆண் வயது 42 என்பவரை அவரது அத்தை சிகிச்சைக்காக ஆஜர் செய்தார் அவரை தான் பரிசோதித்தபோது மயக்கநிலையில் இருந்தார் என்றும் அவரை கடந்த 29.11.2016 ஆம் தேதி வடகண்டம் அருகே காலை 9.45 மணியளவில் 10 தெரிந்த நபர்கள் கத்தியால் குத்தியதாகவும், வெட்டியதாகவும் அவரது அத்தை தன்னிடம் கூறினார் என்றும் அவரை தான் பரிசோதனை செய்த போது வலது கையில் 20x2x6 செ.மீ அளவில் ஓர் வெட்டுக்காயமும், இடதுகால் பின்காலில் 5x2x2 செ.மீ அளவில் ஓர் வெட்டுக்காயமும், வலது முதுகில் 2x1x விரல் செல்லும் அளவில் ஓர் குத்துக்காயமும், வலது முதுகில் 5x4x2 செ.மீ அளவிலும் 4x3x2 செ.மீ அளவிலும் இரண்டு வெட்டுக்காயங்கள் வலது முதுகில் காணப்பட்டது என்றும் அவரையும் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன் என்றும் அதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது என்றும் அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் அ.சா.ஆ.15 என்றும் அதேநாள் காலை 10.43 மணியளவில் முரளி, த/பெ. குஞ்சுப்பிள்ளை ஆண் வயது 31 என்பவரை அவரது அப்பா குஞ்சுப்பிள்ளை சிகிச்சைக்காக ஆஜர் செய்தார்

என்றும் தான் அவரை பரிசோதனை செய்து அவருக்கு இருந்த காயங்களை பார்வையிட்டு உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன் என்றும் அதற்கான விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் ஏற்கனவே அ.சா.11 ன் மூலம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதே நாள் காலை 10.47 மணியளவில் குஞ்சுப்பிள்ளை, த/பெ. கோபால்ராஜன், ஆண் வயது 62 என்பவரை அவரது மனைவி சிகிச்சைக்காக ஆஜர்படுத்தினார் என்றும் தான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவோடு காணப்பட்டார் என்றும் அவர் தன்னை 8 தெரிந்த நபர்கள் இரும்பு கம்பியால், திருக்கண்ணமங்கையில் உள்ள தனது வீட்டருகே கடந்த 29.11.2016 ஆம் தேதி காலை 8 மணியளவில் தாக்கியதாக கூறினார் என்றும் அவருக்கு வலது முன்கையில் 10x10 செ.மீ அளவில் வீக்ககாயமும், இடது தோள்பட்டையில் 10x5 செ.மீ அளவில் வீக்க காயமும், இடது பெருவிரலில் பிளவு காயமும், காணப்பட்டது என்றும் அவரையும் தான் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன் என்றும் அதற்காக தான் வழங்கிய விபத்து பதிவேட்டு ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது என்றும் அந்த விபத்து பதிவேட்டு ஆவணம் அ.சா.ஆ.16 என்றும் குஞ்சுப்பிள்ளைக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என கருத்து தெரிவித்து மருத்துவ சான்றிதழ் வழங்கினேன். முத்துகிருஷ்ணனுக்கு எலும்பு முறிவு மருத்துவர் திரு.கோகுலகிருஷ்ணன் சிகிச்சையளித்து அவருக்குஏற்பட்டுள்ள காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியுள்ளார் என்றும் அந்த காயச்சான்றிதழில் நானும் மேற்படி முத்துகிருஷ்ணனை சிகிச்சைக்கு

அனுமதித்தவர் என்ற முறையில் கையொப்பம் செய்துள்ளேன் என்றும் அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.17 என்றும் இதுசம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.ஆ.13 திரு.ஷாபி – தனது சாட்சியத்தில், தான் தற்போது அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இணை பேராசிரியாக பணிபுரிந்து வருகிறேன் என்றும் கடந்த 29.11.2016 ஆம் தேதி அன்று திருவாரூர் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்த போது அவசர சிகிச்சை பணிமருத்துவர் திரு. ரஞ்சித் அவர்களால் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த பசுபதி என்பவரை பரிசோதனை செய்தேன் என்றும் அவரை கடந்த 10.12.2016 ஆம் தேதி தான் சிகிச்சையிலிருந்து விடுவித்தேன் என்றும் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்களில் வலது கால் பாதத்தில் 5 வது விரலில் உள்ள Meta Tarsal என்ற எலும்பு முறிவு காயம்ஏற்பட்டிருந்ததால், அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் கொடுங்காயம் என கருத்து தெரிவித்து மருத்துவ சான்று வழங்கினேன். அந்த மருத்துவ சான்றுதான் தற்போது காட்டப்படுவது. அந்த மருத்துவ சான்று அ.சா.ஆ.18 என்றும் கடந்த 29.11.2016 ஆம் தேதி திருவாரூர் அரசு மருத்துவமனையில் பணி மருத்துவராக இருந்த திரு. ரஞ்சித் என்பவர் குஞ்சுப்பிள்ளை என்பவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்திருந்தார் என்றும் மேற்படி குஞ்சுப்பிள்ளை 03.01.2017 ஆம் தேதி சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்றும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என கருத்து தெரிவித்து மருத்துவ சான்று வழங்கினேன் என்றும் அந்த மருத்துவ சான்றுதான் தற்போது

காட்டப்பபடுவது என்றும் அந்த மருத்துவ சான்று அ.சா.ஆ.19 என்றும் இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.ஆ.14 திரு.ராஜேந்திரன் – தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவில் முதுநிலை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் கடந்த 29.11.2016 ஆம் தேதி அன்று மேற்படி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற மாரியம்மாள் என்பவர் மருத்துவ அறிவுறுத்தலின்றி மாலை 6.30 மணியளவில் தலைமறைவாகிவிட்டார் என்றும் அதனால் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து கருத்து தெரிவிக்க இயலாது என்று மருத்துவ சான்று வழங்கினேன் என்றும் அந்த மருத்துவ சான்றுதான் தற்போது காட்டப்பபடுவது என்றும் அந்த மருத்துவ சான்று அ.சா.ஆ.20 என்றும் இதுசம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14. அ.சா.ஆ.15 திரு.கிருஷ்ணமூர்த்தி – தனது சாட்சியத்தில், தான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து, ஓய்வு பெற்று பி.49, தென்றல் நகர், திருவாரூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன் என்றும் தான் கடந்த 29.11.2016 ஆம் தேதி குடவாசல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்த போது, திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி

மருத்துவமனையிலிருந்து முரளி, த/பெ. குஞ்சுப்பிள்ளை என்பவர் காயமுற்று சிகிச்சையிலிருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலை பெற்றேன். உடனடியாக மேற்படி மருததுவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த முரளி என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் மேற்படி புகார் வாக்குமூலம் அடிப்படையில் குடவாசல் காவல்நிலையக் குற்ற எண்436/2016 இதச பிரிவுகள் 147, 148, 341, 294(பி), 323, 324, 452, 506(2), 307ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையையும், புகார்வாக்குமூலத்தையும் இணைத்து திருவாரூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கும் ஒரு நகலை புலன் விசாரணைக்காக குடவாசல் காவல்நிலைய ஆய்வாளர் திரு.செல்வம் அவர்களிடம் ஒப்படைத்தேன். தற்போது காட்டப்படும் புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் நான் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும் புகார் வாக்குமூலம் ஏற்கனவே அ.சா.1ன் மூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது என்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.21 என்றும் ஆய்வாளர் தன்னை இது சம்பந்தமாக விசாரித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

15. அ.சா.ஆ.16 திரு.செல்வம் – தனது சாட்சியத்தில், தான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து, ஓய்வு பெற்று கதவு எண்.9, வடக்கு வள்ளுவர்தெரு, கும்பகோணம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன் என்றும் தான் கடந்த 29.11.2016 ஆம் தேதி

குடவாசல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது, மேற்படி காவல் நிலையத்தின் உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவர் பதிவு செய்து வைத்திருந்த, குடவாசல் காவல் நிலைய குற்ற எண்436/2016 என்ற வழக்கு கோப்பினை எனது புலன் விசாரணைக்காக பெற்றுக் கொண்டேன் என்றும் அன்றே பகல் 1 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் தெட்சிணாமூர்த்தி, தங்கராசு முன்னிலையில் சமபவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன் என்றும்  பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும்  பார்வை மகசர் அ.சா.ஆ.22 என்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.23 பார்வை மகசர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும்   சாட்சிகள் முரளி, முத்துகிருஷ்ணன், குஞ்சுப்பிள்ளை, ஜெயா, மாரியம்மாள், பசுபதி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் பின்னர் அன்று பிற்பகல் 3 மணியளவில் காட்டூர் பேருந்து நிறுத்தமருகே நின்றிருந்த இவ்வழக்கின் எதிரிகளான தமிழ்வாணன், தமிழ்குமரன், கலையரசி ஆகிய மூவரையும் கைது செய்தேன் என்றும் பின்னர் பிற்பகல் 3.15 மணியளவில் எதிரி தமிழ்வாணன் என்பவர் சாட்சிகள் ரெங்கநாதன் மற்றும் ரவி ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னுடன் வந்தால், நாங்கள் தூக்கி போட்ட அருவாளையும், ஆணி பிடுங்கும் பாறையையும் எடுத்து தருகிறேன் என்றும், நாங்கள் தகராறு செய்ய பயன்படுத்திய, தான் தற்போது வைத்துள்ள டி.என்.51 எப்.1351 என்ற டிவிஎஸ் ஸ்போர்ட் இருச்சக்கர

வாகனத்தையும் ஆஜர் செய்வதாக கூறினார் என்றும் அதனடிப்படையில் மாலை 4.30 மணியளவில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 1 ஆம் எதிரி தமிழ்வாணனிடமிருந்து மேற்படி இருச்சக்கர வாகனத்தை மகசர் மூலம் கைப்பற்றினேன் என்றும் அதற்கான ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.24 அன்று மாலை 5.15 மணியளவில் எதிரி தமிழ்வாணன் எங்களையும் மற்றும் சாட்சிகளை அழைத்துச் சென்று காட்டூர் காளவாய்க்கால் மதகிற்கு கீழிருந்த சுமார் 40 செ.மீ நீளமுள்ள அருவாள் ஒன்றையும், சுமார் 90 செ.மீ நீளமுள்ள ஆணிபிடுங்கும் கம்பிபாரை ஒன்றையும், எடுத்து ஆஜர் செய்ததை மகசரில் கைப்பற்றினேன் என்றும் அதற்கான கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.25 என்றும் 1 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் வழக்கு சொத்துக்களை தன்னால் கண்டுபிடிக்க முடிந்தது. 1 ஆம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில், **தன்னுடன் வந்தால், நாங்கள் தூக்கி போட்ட அருவாளையும், ஆணி பிடுங்கும் பாரையையும் எடுத்து தருகிறேன் என்றும், நாங்கள் தகராறு செய்ய பயன்படுத்திய, நான் தற்போது வைத்துள்ள டி.என்.51 எப்.1351 என்ற டிவிஎஸ் ஸ்போர்ட் இருச்சக்கர வாகனத்தையும் ஆஜர் செய்வதாக** கூறிய பகுதி மட்டும் அ.சா.ஆ.26 என்றும் கைது செய்யப்பட்ட எதிரிகளை கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் நீதிமன்ற காவலுக்கு தக்க வழிக்காவலுடன் நீதிமன்றம் ஆஜர் செய்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன் என்றும் அருவாள் மற்றும் கடப்பாரையை ஆஜர் செய்ததற்கான படிவம் 91 அ.சா.ஆ.27 என்றும் இருச்சக்கர வாகனத்தை ஆஜர் செய்ததற்கான

படிவம் 91 அ.சா.ஆ.28 என்றும் தற்போது காட்டப்படும் புகைப்படத்திலுள்ள இருச்சக்கர வாகனம்தான் நான் 1 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தில் கைப்பற்றியது என்றும் இருச்சக்கர வாகனத்திற்கான புகைப்படம் இரண்டு அ.சா.ஆ.29ன் வரிசை என்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 25.01.2017 ஆம் தேதியன்று இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் நடராஜசேதுபதி, ரஞ்சித், கோகுலகிருஷ்ணன், ஷாபி, ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன், மற்றும் காயச்சான்றிதழ்கள் பெற்றேன் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் இவ்வழக்கின் சட்டபிரிவுகளை இதச பிரிவுகள் 147, 148, 341, 294(பி), 323, 324, 452, 506(2), 307 என்பதை இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 307,451, 334,335, 149, 109, கீழ் சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்தேன் என்றும் அந்த சட்ட மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.30 என்றும் இதர எதிரிகள் முன் பிணையில் ஆஜராகிவிட்டனர் என்றும் வழக்கின் புலன்விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

16. இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313 (1)(b)–ன் கீழ் வினவிய போது எதிரிகள்

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் அனைத்தும் பொய் எனவும், தமது தரப்பில் விசாரணை செய்ய சாட்சியம் இல்லை என்றும் கூறினர். என்றும் சாட்சியமளித்துள்ளார்.

17. இந்த வழக்கில் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை, ஆவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**18. இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் :–**

**இவ்வழக்கின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.**

## தீர்வு

19. அரசு தரப்பில் வாதிட்ட அரசு வழக்கறிஞர், எதிரிகள் அனைவரும் கூட்டு சேர்ந்து ஒத்த கருத்துடன் அ.சா.1 முரளி, அ.சா.2 முத்துகிருஷ்ணன், அ.சா.3 குஞ்சுப்பிள்ளை ஆகியோரை கொலை செய்யும் எண்ணத்தில் செயல்பட்டு அவர்களை தாக்கி கொடுங்காயங்கள் ஏற்படுத்தியுள்ளதாகவும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும் வாதம் எடுத்துரைத்தார். அதற்கு மாறாக எதிரிகள் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் எதிரிகளுக்கும், வாதிகளுக்கும் ஏற்கனவே இருந்த வழக்கு தொடர்பாக முன் விரோதம் இருந்து வந்தது என்றும் அதை பயன்படுத்தி இருசக்கர வாகனத்தில் சென்ற அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர் நிலை தடுமாறி கீழே விழுந்து காயம் ஏற்படுத்தி கொண்டதை எதிரிகள் தாக்கியதாக குறிப்பிட்டு அவர்கள்

மீது பொய்யான புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக வாதம் எடுத்துரைத்தார்.

20. வழக்கு சம்பவமானது 29.11.2016ம் தேதி நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது. அது தொடர்பாக 29.11.2016-ம் தேதி திருவாரூர் அரசு மருத்துவமனையில் வைத்து அ.சா.1 முரளி கொடுத்த புகார் அ.சா.ஆ.1ன் அடிப்படையில் குடவாசல் காவல்நிலைய குற்ற எண்.436/2016 என 29.11.2016ம் தேதி எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.21 பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அதே தேதியில் புகார் கொடுக்கப்பட்டு முதல்தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது. புகார் கொடுக்கப்பட்டதிலோ, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதிலோ காலதாமதம் ஏதும் இல்லை.

<u>1, 2 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 294(b)ன் கீழான குற்றச்சாட்டு:</u>

21. அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோரை 1, 2 எதிரிகள் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக அரசு தரப்பில் கூறப்பட்டது. அ.த.சா.ஆ.1 புகார் மற்றும் அ.த.சா.ஆ.21 முதல் தகவல் அறிக்கையிலும் அவ்வாறே கூறப்பட்டுள்ளது. அரசு தரப்பு சாட்சியங்களின்படி பார்க்கும்போது, அ.சா.1முரளி, அ.சா.2 முத்துக்கிருஷ்ணன் அ.சா.3 குஞ்சுபிள்ளை ஆகியோர்கள் மட்டுமே சம்பவ இடத்தில் இருந்ததாக சாட்சியமளித்துள்ளனர். 1, 2 எதிரிகள் திட்டியதாக சொல்லும் சமயத்தில்

சம்பவ இடத்தில் வேறு தனி நபர்கள் யாரும் இருந்ததாக எவ்வித சாட்சியமும் இல்லை. புகார்தாரர் மற்றும் அ.சா.2, 3ஐ 1, 2 எதிரிகள் திட்டியதாக சொல்லப்படும் சம்பவ இடமானது பொது மக்கள் பார்க்கும் வகையில் இல்லை. அதைபொறுத்து இந்திய தண்டனை சட்டம் பிரிவு 294ல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

***Section 294(b) of IPC: sings, recites or utters any obscene song, ballad or words, in or near any public place,***

அதன்படி பார்க்கையில் ஒரு நபரை ஆபாச வார்த்தையால் திட்டியதாக சொல்லப்படும்போது பொது வெளியில் திட்டி அதை பல நபர்கள் பார்க்கும்பட்சத்தில் அந்த நபருக்கு அசிங்கமாக இருந்தது என்றால் மட்டுமே இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294(b)ன் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும் என்று ***Pavankumar Vs State of Haryana reported in (1996) 4 SCC 17*** என்ற மேதகு உச்ச நீதிமன்ற முன் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட மேதகு உச்ச நீதிமன்ற முன் தீர்ப்பு இவ்வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்தியே உள்ளது. இவ்வழக்கிலும் புகார்தாரர் மற்றும் அ.சா.2, 3 ஆகியோரை 1, 2 எதிரிகள் திட்டியதாக போலீஸ் விசாரணையில் கூறியுள்ளனர். அவ்வாறு 1, 2 எதிரிகள் திட்டியதை வேறு பொது நபர்கள் யாரும் பார்த்ததாகவும், அதனால் தங்களுக்கு அசிங்கமாகிவிட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. எனவே, அங்கு வேறு பொதுமக்கள் யாரும் இல்லாத நிலையிலும், அ.சா.1, 2 மற்றும் அ.சா.3ஐ 1, 2 எதிரிகள் ஆபாசமான வார்த்தையால் திட்டியதாக எந்த சாட்சியும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத காரணத்தாலும், 1, 2

எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 294(b)ற்கான முகாந்திரம் எதுவும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**<u>1 முதல் 6 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 147 ன் கீழான குற்றச்சாட்டு</u>**

22. கடந்த 29.11.2016 அன்று நன்னிலம் நீதிமன்றத்திற்கு செல்வதற்காக சாட்சி முரளி இருசக்கர வாகனத்தை ஓட்ட முத்துக்கிருஷ்ணன் மற்றும் குஞ்சுப்பிள்ளை ஆகியோர் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருந்த போது அவர்களை 1 முதல் 6 எதிரிகள் இருசக்கர வாகனத்தில் சென்று சாட்சிகளை விரட்டி ஒன்று கூடி கலகம் ஏற்படுத்தியதாக 1 முதல் 6 எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 புகாரில் 1, 2 எதிரிகள் மட்டுமே முதலில் இருசக்கர வாகனத்தில் வந்து தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது. அதன் பிறகு 3 முதல் 6 எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்ததாக சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறே அ.சா.ஆ.21 முதல் தகவல் அறிக்கையிலும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் 1 முதல் 6 எதிரிகள் 3 இரு சக்கர வாகனங்களில் தங்களை விரட்டி வந்து மறித்து தாக்கினார்கள் என்று அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரின் சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. அதே போல் 1 முதல் 6 எதிரிகள் ஒத்த கருத்துடன் குற்றமுறு எண்ணத்துடன் சட்ட விரோதமாக கூடி தங்களை துரத்தி வந்து தாக்கியதாக எவ்வித சாட்சியும் சாட்சியமளிக்கவில்லை. எனவே 1 முதல் 6 எதிரிகளுக்கெதிரான இதச பிரிவு 147–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**<u>1, 2 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 148ன் கீழான குற்றச்சாட்டு:</u>**

23. கடந்த 29.11.2016ம் தேதி 1, 2 எதிரிகள் தங்களது கையில் அருவாள் மற்றும் ஆணி பிடுங்கும் பாறை ஆகியவற்றை வைத்து கொண்டு கலகம் ஏற்படுத்தியதாகவும் மேற்படி நபர்களின் செயலானது இதச பிரிவு 148-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என அரசு தரப்பில் கூறப்பட்டது. அ.சா.1 முரளி தனது சாட்சியத்தில் தன்னை 1, 2 எதிரிகள் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. மாறாக எதிரிகள் அனைவரும் கட்டை மற்றும் அருவாளால் தாக்கியதாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் 1, 2 எதிரிகள் அருவாள் மற்றும் கம்பி பாறையால் தாக்கியதாக சொல்லியுள்ளனர். 1, 2 எதிரிகள் வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தியதாக சொல்லும் ஆயுதங்கள் குறித்து சம்பவ சாட்சிகளான அ.சா.1, 2, 3 ஆகியோருக்கிடையே ஒருமித்த கருத்து இல்லை. அதே போல் 1, 2 எதிரிகள் கொடிய ஆயுதங்கள் வைத்திருந்ததாக தனி நபர் சாட்சிகள் யாரும் சாட்சியமளிக்கவில்லை. எனவே எனவே 1, 2 எதிரிகளுக்கெதிரான இதச பிரிவு 148-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**<u>1, 2 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 341ன் கீழான குற்றச்சாட்டு:</u>**

24. சம்பவ தேதியான 29.11.2016 அன்று அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் இருசக்கர வாகனத்தில் சென்ற போது அவர்களை 1, 2 எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்து வழிமறித்து தாக்கியதாக அரசு தரப்பில்

கூறப்பட்டுள்ளது. ஆனால் அ..சா.1 முரளி முதல் விசாரணையில் 1, 2 எதிரிகள் தங்களை வழி மறித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை. இந்நிலையில் 1, 2 எதிரிகள் தங்களை வழிமறித்து தாக்கியதாக அ.சா2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தங்கள் முதல் விசாரணையில் கூறியுள்ளனர். ஆனால் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது பிரேக் போட்டதால் கீழே விழுந்ததாக அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார். அதே போல் அ.சா.5 பசுபதி தன் மீது இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் மோதி விட்டதாக மருத்துவரிடம் கூறியுள்ளார். எனவே 1, 2 எதிரிகள் அ.சா.1, 2, 3 ஐ சட்ட விரோதமாக மறித்து தாக்கினார்கள் என்று கூறியுள்ளதை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**<u>1 முதல் 7 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 324, 307, 335, 451, 307 உ/இ 149, 307 உ/இ 109ன் கீழான குற்றச்சாட்டு:</u>**

25. மேற்படி தேதியில் 1ம் எதிரி தான் கையில் வைத்திருந்த அருவாளால் முரளியின் தலையில் வெட்ட சென்ற போது அவர் விலகி கொண்டதால் முத்துகிருஷ்ணன் தலையில் பட்டு காயம் ஏற்பட்டதாகவும், 2ம் எதிரி தன் கையில் வைத்திருந்த ஆணி பிடுங்கும் பாறையால் தாக்கி காயம் ஏற்படுத்தியதாகவும் முரளியின் தலையில் வெட்ட சென்ற போது இத்தோடு செத்து தொலைடா என சொல்லி வெட்டியதாகவும், அதற்கு 3 முதல் 6 எதிரிகள் அ.சா.1–ஐ கொலை செய்யும் நோக்கில் பொது கருத்துடன் மாறி மாறி தாக்கி காயம் ஏற்படுத்தியதாகவும் அ.சா.4 ஜெயாவை 2ம் எதிரி பாறையால் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாகவும் 1 முதல் 7 எதிரிகள்

பொதுவான உட்கருத்துடன் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகளை கொலை செய்யும் நோக்கில் செயல்பட்டதாகவும் அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

26. புகார் அ.சா.ஆ.1 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.21 ஆகியவற்றில் எதிரிகளின் செயல் தனித்தனியாக குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.1 முரளி தனது சாட்சியத்தில் எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கட்டை மற்றும் அருவாளால் தாக்கியதாக கூறியுள்ளார். அ.சா.2 முத்துகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் 1, 2 எதிரிகள் முதலில் அருவாள் மற்றும்கம்பி பாறையால் தன்னையும் தனது தம்பியையும் தாக்கியதாகவும், பின்னர் இருசக்கர வாகனத்தில் வந்த பாஸ்கர், சுரேஷ், பாலு ஆகியோர் தாக்கியதாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் யார் யார் எந்த ஆயுததத்தால் எந்த இடத்தில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. அதே போல் அ.சா.3 குஞ்சுப்பிள்ளையும் யார் யார் எந்த ஆயுததத்தால் எந்த இடத்தில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. அதன் படி பார்க்கையில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளுக்கு யாரால் என்ன வகையான காயம் ஏற்படுத்தப்பட்டது என்று அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை.

26. அ.சா.4 ஜெயா தனது சாட்சியத்தில் எதிரிகள் அனைவரும் தனது வீட்டிற்குள் கம்பி, அருவாள் போன்ற ஆயுதங்களுடன் வந்து தனது முதுகில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும் கூட்டத்தில் யார் வெட்டியது என்று நியாபகமில்லை என சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.1

முரளிக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.9–ல் அடையாளம் தெரிந்த 10 நபர்கள் காலை 9 மணிக்கு இரும்பு ராடால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.2 முத்துக்கிருஷ்ணனுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.15 காலை 9.45 மணிக்கு அடையாளம் தெரிந்த 10 நபர்கள் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் அ.சா.3 குஞ்சுப்பிள்ளைக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.16–ல் காலை 8 மணிக்கு அடையாளம் தெரிந்த 8 நபர்கள் இரும்பு ராடால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல் அ.சா.4 ஜெயாவுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.11–ல் காலை 8 மணிக்கு அடையாளம் தெரிந்த 10 நபர்கள் கட்டையால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

27. அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகளின் விபத்து பதிவேட்டில் சம்பவ நேரமானது மாறி மாறி சொல்லப்பட்டுள்ளது. அதே போல் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லும் நபர்களின் எண்ணிக்கையும் மாறி மாறி குறிப்பிடப்பட்டுள்ளது. 8 மற்றும் 10 அடையாளம் தெரிந்த நபர்கள் தாக்கியதாக மருத்துவரிடம் கூறிவிட்டு 7 நபர்கள் மீது மட்டும் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகையால் எதிரிகளுக்கெதிரான புகாரானது பின் யோசனையிட்டு கொடுக்கப்பட்டிருக்கும் என இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகின்றது. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளுக்கு வழங்கப்பட்ட காயச்சான்று முறையே அ.சா.ஆ.10, அ.சா.ஆ.12, அ.சா.ஆ.17, அ.சா.ஆ.19 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அது குறித்து சாட்சியமளித்துள்ள அ.சா.11, அ.சா.12 மற்றும் அ.சா.13 மருத்துவர்கள் மேற்படி நபர்களுக்கு

ஏற்பட்ட காயங்கள் இரு சக்கர வாகனத்தில் வேகமாக சென்று தடுமாறி கீழே விழும் போது ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என சாட்சியமளித்துள்ளனர். மேலும் மேற்படி சாட்சிகளுக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மையை பார்க்கும் போது கூர்மையான ஆயுதங்களால் ஏற்பட்டதாக தெரியவில்லை.

28. வழக்கு சம்பவம் தொடர்பாக எந்தெந்த எதிரி எந்த காயத்தை ஏற்படுத்தினார் என அரசு தரப்பில் குறிப்பிட்டு நிரூபணம் செய்யப்படவில்லை. சம்பவ நேரத்தை பொறுத்து 1 முதல் 4 சாட்சிகளிடையே முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன. பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அனைவரும் பிறழ் சாட்சிகளாக மாறி அரசுக்கு எதிராக சாட்சியமளித்துள்ளனர். வழக்கு சம்பவம் தொடர்பாக சாட்சிகளிடையே ஒற்றுமையான கருத்து இல்லை என்பதாலும் சாட்சிகளுக்கு ஏற்பட்ட காயங்கள் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகியவற்றால்தான் ஏற்பட்டுள்ளது என மருத்துவர் சாட்சியம் மூலம் நிருபணம் செய்யப்படவில்லை. எனவே எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு செய்து இதச பிரிவுகள் 147, 148, 341, 294 (பி) , 323, 307, 451, 334, 335, 149 மற்றும் 109ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரிகள் விடுதலை பெற தகுதி உடையவர்கள் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**இறுதியாக,**

1) 1 முதல் 6 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 147மற்றும் 307–ன் கீழான குற்றச்சாட்டுக்களும், 1, 2 எதிரிகளுக்கெதிரான இதச பிரிவுகள் 148, 341, 294(b), 324, 451, 335 மற்றும் 307உ/இ 335–ன் கீழான குற்றச்சாட்டுகளும், 3 முதல் 6 எதிரிகளுக்கெதிரான இதச பிரிவுகள் 307உ/இ149–ன் கீழான குற்றச்சாட்டும், 7ம் எதிரிக்கெதிரான இதச பிரிவு 307உ/இ109–ன் கீழான குற்றச்சாட்டும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, மேற்கண்ட பிரிவுகளின் கீழ் எதிரிகள் விடுதலைபெற உரிமை உடையவர் என குவிமுச பிரிவு 235(1)கீழ் எதிரிகளை மேற்கண்ட பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது.

2) இவ்வழக்கில் சான்று பொருள்–I ஆக குறியீடு செய்யப்பட்ட சுமார் 40 செ.மீ நீளமுள்ள அருவாள் 1ம் சா.பொ.2 ஆக சுமார் 93 செ.மீ நீளமுள்ள ஆணி பிடுங்கும் கடப்பாறை –1ம் உபயோகமற்றது என்பதால் மேல்முறையீட்டு காலத்திற்குபின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள TN–51 F 1351 TVS Sports கருப்பு நிற இருசக்கர வாகனத்தை மேல்முறையீட்டு காலத்திற்குபின் உரிமையாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

3) எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்த பிணைமுறிப் பத்திரம் ரத்து செய்ய உத்திரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம்

செய்து சரிப்பார்க்கப்பட்டு, 2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 10–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2026.07.10 16:29:25 +0100

உதவி அமர்வு நீதிபதி,
திருவாரூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| வ.எண் | பெயர் | |
|---|---|---|
| அ.சா.1. | திரு. முரளி | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.முத்துகிருஷ்ணன் | புகார்தாரரின் அண்ணன் |
| அ.சா.3 | திரு.குஞ்சுபிள்ளை | புகார்தாரரின் தகப்பனார் |
| அ.சா.4 | திருமதி.ஜெயா | புகார்தாரரின் அண்ணி |
| அ.சா.5 | திரு. பசுபதி | விபத்தில் காயம்பட்ட சாட்சி |
| அ.சா.6 | திரு. தங்கராசு | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.7 | திரு.ரவி | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| அ.சா.8 | திருமதி.மாரியம்மாள் | விபத்தில் காயம்பட்ட சாட்சி |
| அ.சா.9 | திரு.தெட்சிணாமூர்த்தி | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.10 | திரு.ரெங்கநாதன் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| அ.சா.11 | திரு.நடராஜசேதுபதி | மருத்துவர் |
| அ.சா.12 | திரு.ரஞ்சித் | மருத்துவர் |
| அ.சா.13 | திரு.ஷாபி | மருத்துவர் |

| | | |
|---|---|---|
| அ.சா.14 | திரு.ராஜேந்திரன் | மருத்துவர் |
| அ.சா.15 | திரு.கிருஷ்ணமூர்த்தி | காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.16 | திரு.செல்வம் | காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| வ.எண். | நாள் | விவரம் |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 29.11.2016 | புகார் வாக்குமூலம் (அ.சா.1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.2 | 29.11.2016 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் (அ.சா.7 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.3 | 29.11.2016 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் (அ.சா.7 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.4 | 29.11.2016 | கைப்பற்றுதல் மசஜர் (அ.சா.7 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.5 | 29.11.2016 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் (அ.சா.9 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.6 | 29.11.2016 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள உள்ள ஒன்றாவது சாட்சி கையொப்பம் (அ.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.7 | 29.11.2016 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் (அ.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.8 | 29.11.2016 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் (அ.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.9 | 29.11.2016 | விபத்து பதிவேடு (அ.சா.11 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.10 | 29.11.2016 | காயச்சான்று (அ.சா.11 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.11 | 29.11.2016 | விபத்து பதிவேடு (அ.சா.11 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.12 | 29.11.2016 | கருத்துரை (அ.சா.11 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.13 | 29.11.2016 | விபத்து பதிவேடு (அ.சா.12 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.14 | 29.11.2016 | விபத்து பதிவேடு (அ.சா.12 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.15 | 29.11.2016 | விபத்து பதிவேடு (அ.சா.12 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.16 | 29.11.2016 | விபத்து பதிவேடு (அ.சா.12 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.17 | 29.11.2016 | ஊனச்சான்று (அ.சா.12 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.18 | 29.11.2016 | ஊனச்சான்று (அ.சா.13 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.19 | 03.11.2017 | ஊனச்சான்று (அ.சா.13 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.20 | 29.11.2016 | ஊனச்சான்று (அ.சா.14 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.21 | 29.11.2016 | முதல் தகவல் அறிக்கை (அ.சா.15 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.22 | 29.11.2016 | பார்வை மகஜர் (அ.சா.16 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.23 | 29.11.2016 | மாதிரி வரைபடம் (அ.சா.16 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.24 | 29.11.2016 | கைப்பற்றுதல் மகஜர் (அ.சா.16 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.25 | 29.11.2016 | கைப்பற்றுதல் மகஜர் (அ.சா.16 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.26 | 29.11.2016 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி (அ.சா.16 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.27 | 29.11.2016 | படிவங்கள் 91 (அ.சா.16 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.28 | 29.11.2016 | படிவங்கள் 91 (அ.சா.16 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.29 | -- | இருச்சக்கர வாகனம் புகைப்படம் (அ.சா.16 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |
| அ.த.சா.ஆ.30 | 03.03.2017 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.16 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது) |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:–**

| | |
|---|---|
| சா.பொ.1 | சுமார் 40 செ.மீ நீளமுள்ள அருவாள் 1 |
| சா.பொ.2 | சுமார் 93 செ.மீ நீளமுள்ள ஆணி பிடுங்கும் கடப்பாறை –1 |
| சா.பொ.3 | TN–51 F 1351 TVS Sports கருப்பு நிற இருசக்கர வாகனம் |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–** இல்லை

**குறிப்பு:–**

1. இவ்வழக்கில் சாட்சிகள் 3 நாட்களுக்கு மேல் எவரும் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.

3. வழக்கு தீர்ப்பு குறித்து காவல் நிலையத்திற்கு சிறு குறிப்பு வழங்கப்பட்டது.

4. சான்று பொருள்கள் குறித்த உத்தரவு தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2026.07.10 16:29:30 +0100

உதவி அமர்வு நீதிபதி,
திருவாரூர்.